## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1. 2019 ஆம் ஆண்டை சர்வதேச தனிம வரிசை அட்டவணை ஆண்டாக (International Year of the Period Table of Chemical Elements (IYPT-2019) அறிவித்துள்ள அமைப்பு?**

[A] UNESCO

[B] UNIDO

[C] FAO

[D] ITU

- ✓ ஜனவரி 29 ம் தேதி, யுனெஸ்கோ அமைப்பு, பாரிஸில் அதன் தலைமையகத்தில் 2019 ஆம் ஆண்டை சர்வதேச தனிம வரிசை அட்டவணை ஆண்டாக (**International Year of the Period Table of Chemical Elements (IYPT**-2019) அறிவித்துள்ளது.
- ✓ 2019 ஆம் ஆண்டு **ரஷ்ய விஞ்ஞானி டிமிட்ரி இவானோவிச் மெண்டலீவ்**, தனிம வரிசை அட்டவணையை உருவாக்கிய 150 வது ஆண்டு விழா ஆகும் .
- ✓ தனிம வரிசை அட்டவணையானது விஞ்ஞானிகள், பூமியில் மற்றும் பிரபஞ்சத்தில் உள்ள பருப்பொருளின் தோற்றம் மற்றும் பண்புகளை ஆராய்வதற்கு உதவுகிறது.

**2.** இந்திய ஒளிபரப்பு ஆய்வு குழுமத்தின் (**BARC)** புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்?

**[A]** நகுல் சோப்ரா

**[B]** பார்த்தோ தாஸ் குப்தா

**[C]** புனித் கோயங்கா

**[D]** மிலன் ஷர்மா

- ✓ ஜீ என்டர்டெயின்மென்ட் எண்டர்பிரீஸஸ் லிமிடெட் (**ZEEL**) நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரான புனித் கோயங்கா **(Punit Goenka)**, இந்திய ஒளிபரப்பு ஆய்வு குழுமத்தின் (**Broadcast Audience Research Council, BARC)** புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இவர் **BARC India** அமைப்பை நிறுவி, தொலைக்காட்சி பார்வையாளர் அளவீடு நிறுவனம் **(TV Viewership measurement company)** அமைக்க பெரும் பங்குவகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
- ✓ முன்னதாக நகுல் சோப்ரா இப்பதவியை வகித்தார்.
- ✓ **BARC India** **மும்பையை தலைமையிடமாக** கொண்டு செயல்படுகிறது.

winmeen.com

- ✓ **BARC** இந்தியா என்பது ஒளிபரப்பாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் விளம்பரப்படுத்தல் மற்றும் ஊடக முகமைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பங்குதாரர்களால் நிறுவப்பட்ட ஒரு கூட்டு தொழில் நிறுவனமாகும்.

**3. 'Aber'** எனப்படும் பொதுவான டிஜிட்டல் நாணயத்தை அறிமுகப்படுத்தியுள்ள நாடு?

**[A]** ஜெர்மனி மற்றும் பிரான்ஸ்

**[B]** ஜப்பான் மற்றும் தென் கொரியா

**[C]** சீனா மற்றும் வட கொரியா

**[D]** ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சவுதி அரேபியா

- ✓ **UAE** மற்றும் சவூதி அரேபியா மத்திய வங்கிகள் "**Aber**" எனும் ஒரு பொதுவான டிஜிட்டல் நாணயத்தை அறிமுகப்படுத்தியுள்ளன.
- ✓ இந்த நாணயமானது இரு நாடுகளுக்கும் இடையில் **Blockchains** மற்றும் டிஸ்ட்ரிபியூட்டட் லெட்ஜெர் டெக்னாலஜீஸ் **(Distributed Ledgers technologies)** மூலம் நிதி பரிமாற்றங்களில் பயன்படுத்தப்படும். மேலும் இரு நாடுகளின் மத்திய நிதி பரிமாற்ற முறைகளுக்கு ஒரு கூடுதல் வழிமுறையை உருவாக்கும். மேலும் வங்கிகள் நேரடியாக ஒருவருக்கொருவர் நிதிநிலைகளை சமாளிக்க உதவும்.
- ✓ **The United Arab Emirates Central Bank (UAECB)** மற்றும் **The Saudi Arabian Monetary Authority (SAMA)** இணைந்து முன்னேற்றம் மற்றும் பணம் செலுத்துதல், செலவுகள் மற்றும் அபாயங்கள் பற்றிய மதிப்பீடு ஆகியவற்றின் தாக்கத்தை ஆய்வு செய்கின்றனர்.

4. ஆப்பிரிக்காவின் காலநிலை மற்றும் நிலையான அபிவிருத்திக்கான மையம் **(The Centre for Climate and Sustainable Development)** சமீபத்தில் எந்த நாட்டில் தொடங்கப்பட்டது?

**[A]** தென் ஆப்பிரிக்கா

**[B]** இத்தாலி

**[C]** நெதர்லாந்து

**[D]** பிரேசில்

- ✓ ரோம் நகரில், இத்தாலிய பிரதம மந்திரி கியூசெப் கான்டே **(Giuseppe Conte)** சமீபத்தில் **the United Nations Development Programme (UNDP)** மற்றும் **FAO** ஆகியோருடன் இணைந்து 'ஆப்பிரிக்காவின் காலநிலை மற்றும் நிலையான அபிவிருத்திக்கான மையத்தினை' **(The African**



winmeen.com

**Centre for Climate and Sustainable Development)** தொடங்கினார். இம்மையம் காலநிலை மாற்றத்தை எதிர்த்து, ஆப்பிரிக்காவில் நிலையான வளர்ச்சியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

- ✓ 2017 ல் சுற்றுச்சூழல் அமைச்சர்களின் **G**7 கூட்டத்தின் ஒப்புதலை பெற்று இம்மையம் தொடங்கப்பட்டுள்ளது.
- ✓ ஆப்பிரிக்காவில் காலநிலை மாற்றத்தின் மீதான சிறந்த நடைமுறைகள், உணவு பாதுகாப்பு, நீர் அணுகல், சுத்தமான ஆற்றல், நிலையான வளர்ச்சி இலக்குகள் (**Sustainable Development Goals, SDG**) போன்ற பல்வேறு அம்சங்களை கொண்டுள்ளது.
- ✓ ஆப்பிரிக்க நாடுகளில் **G7** மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் ஒருங்கிணைப்புகளை மேம்படுத்துவதற்கான புதிய மையம் நிறுவப்பட்டது. நிலையான அபிவிருத்திக்கு புதுமையான தீர்வுகளை உருவாக்கவும், **2015** பாரிஸ் உடன்படிக்கை மற்றும் ஐ.நாவின் **2030** செயற்பட்டியலுடனான இலக்குகளை அடையவும் இம்மையம் தொடங்கப்பட்டுள்ளது.

**5. Transparency International (TI)** இன் **2018** ஊழல் புலனுணர்வு குறியீட்டின் படி (**CPI)** இந்தியாவின் தரம் என்ன?

**[A] 78th**

**[B] 81st**

**[C] 62nd**

**[D] 54th**

- ✓ **Global watchdog Transparency International (TI)** சமீபத்தில், 180 நாடுகள் மற்றும் பிரதேசங்களுக்குமான 2018 ஊழல் உணர்ச்சிகளின் குறியீட்டை **(Corruption Perceptions Index (CPI))** வெளியிட்டுள்ளது. இது வல்லுநர்கள் மற்றும் வணிகர்களிடமிருந்து பொதுத்துறை ஊழல் குறித்த தங்கள் நிலைப்பாடுகளை பெற்று வெளியிடப்பட்டது.
- ✓ குறியீடு **0** முதல் **100** வரையிலான ஒரு அளவைப் பயன்படுத்துகிறது, அங்கு **0** அதிக ஊழல் மற்றும் **100** ஊழலற்ற நிலையை குறிக்கின்றது.
- ✓ டென்மார்க், நியூஸிலாந்து மற்றும் பின்லாந்து முறையே **88, 87** மற்றும் **85** புள்ளிகளை பெற்று முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளன. பட்டியலில் சூடான் வெறும் **10** புள்ளிகளை மட்டுமே பெற்று கடைசி இடத்தை பிடித்துள்ளது.
- ✓ ஒட்டுமொத்தமாக, **2018 CPI** யில் , மூன்றில் இரண்டு பங்கு நாடுகளில் **50** க்கும் குறைவாக, **43** என்ற சராசரியான மதிப்பெண்னே பெற்றுள்ளன.
- ✓ சில முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், பெரும்பாலான நாடுகளில் ஊழல்களைத் தவிர்க்க முறையான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவாக தெரிகிறது.

**6. ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 100 விக்கெட்டுகளை விரைவாக வீழ்த்திய இந்திய வேகப்பந்து வீச்சாளர் யார்?**

**[A]** யூஸ்வெந்திர சஹால், **Yuzvendra chahal**

**[B]** குல்தீப் யாதவ், **Kuldeep Yadav**

**[C]** கேதார் ஜாதவ், **Kedar Jadhav**

**[D]** மொஹமட் ஷமி, **Mohammed Shami**

- ✓ 2019 ஜனவரி 23 ஆம் தேதி நியூசிலாந்துக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் எடுத்த விக்கெட்களுடன் விரைவில் 100 விக்கெட்டுகளை கைப்பற்றிய வேகப்பந்து வீச்சாளரானார் மொஹமட் ஷமி. ஷமி தொடக்க ஆட்டக்காரர் மார்ட்டின் கப்டில் **(Martin Guptill)** இன் விக்கெட்டை வீழ்த்தி, தனது 56 வது போட்டியில் இந்த மயில்கல்லை எட்டினார்.
- ✓ ஷமிக்கு முன், இர்பான் பதான் **59** ஒருநாள் போட்டிகளில், ஜாகீர் கான் (**65**), அஜித் அகர்கர் (**67**), ஜவகல் ஸ்ரீநாத் (**68**) ஆகியோர் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய பந்துவீச்சாளர்களாவர். .
- ✓ உலகளவில் ஆப்கானிஸ்தானை சேர்ந்த ரஷீத் கான் **44** போட்டிகளிலும், ஆஸ்திரேலியாவை சேர்ந்த மிட்செல் ஸ்டார்க் **52** போட்டிகளிலும், **100** விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளனர்.

**7. இந்தியாவின் இரண்டாவது துலிப் தோட்டம் பின்வரும் மாநிலங்களில் எங்கு உள்ளது?**

**[A]** நாகலாந்து

**[B]** ஜார்கண்ட்

**[C]** உத்தரகண்ட்

**[D]** சிக்கிம்

- ✓ ஸ்ரீநகருக்கு பிறகு (ஜம்மு-காஷ்மீர்), இந்தியாவின் இரண்டாவது துலிப் பூங்கா ரூ 50 கோடி செலவில் **Chandak** மலை மேல் 50 ஹெக்டேர் பரப்பளவில் உத்தரகண்ட் பித்தோகார்க் மாவட்டத்தில் அமையவுள்ளது. இத்தோட்டம் **ONGC** யின் **Corporate Social Responsibility (CSR) programme** இன் கீழ் உருவாக்கப்படவுள்ளது.
- ✓ டூலிப் என்பது மார்ச் பிற்பாதி முதல் மே மாதம் வரை பூக்கும் ஹாலந்து நாட்டின் மலர் ஆகும்.
- ✓ மாவட்டத்தில் அதிக சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதற்காக மாநில அரசு **'13 districts, 13 new destinations'** திட்டம் மூலம் இந்த தளம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- ✓ இந்த திட்டத்தின் திட்ட அலுவலரின் கூற்றுப்படி, சண்டக் மலை உச்சியில் உள்ள நிலப்பகுதி மலர் வளர்ச்சிக்கு ஏற்றதாக உள்ளது. இது கடல் மேற்பரப்பில் இருந்து **1,950** மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. மேலும் ஆண்டு முழுவதும் சூரியஒளியுடனும் மற்றும் குளிராகவும் இப்பகுதி உள்ளது.

**8.** சமீபத்தில் இறந்த தாரா டோடிவால்லா **(Dara Dotiwalla),** எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

**[A]** கிரிக்கெட்

**[B]** பாட்மிண்டன்

**[C]** டென்னிஸ்

**[D]** கால்பந்து

- ✓ 1986 இல் சென்னையில் நடைபெற்ற இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையேயான பிரபலமான டெஸ்ட் போட்டியில் தலைமை தாங்கிய இந்திய முன்னாள் நடுவர் **Dara Dotiwalla** (85) , காலமானார்.
- ✓ அக்டோபர் **30, 1933** இல் பிறந்த டோடிவால்லா **1982** முதல் **1987** வரை ஆறு டெஸ்ட் போட்டிகளில் பணியாற்றினார். **1982** முதல் **1988** வரை அவர் எட்டு ஒருநாள் சர்வதேச போட்டிகளில் (**ODI**) பணியாற்றியுள்ளார். 1986 ஆம் ஆண்டு சென்னை டைட் டெஸ்டில் (**India Australia Tied Test Match**) அவர் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது .
- ✓ நடுவர் என்ற முறையில் **1982** ஆம் ஆண்டு பெங்களூரில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நடந்த போட்டி இவரின் முதல் ஒருநாள் சர்வதேச போட்டியாகும். **1988** ஆம் ஆண்டில் நியூஸிலாந்திற்கு எதிராக கட்டாக்கில் நடைபெற்ற போட்டி இவரின் இறுதி போட்டியாகும்.

**9.** கிராமப்புற மின்மயமாக்களுக்காக கார்னட் பரிசு பெற்ற இந்தியர் யார்?

**[A]** முகேஷ் அம்பானி

**[B]** பியூஸ் கோயல்

**[C]** பிரேந்திர சிங் சௌத்திரி

**[D]** ரத்தன் டாடா

- ✓ மத்திய நிதியமைச்சர் பியுஷ் கோயலுக்கு ஜனவரி 30 ஆம் தேதி பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் குழுவினரால் நிலையான ஆற்றல் தீர்வுகளை வழங்கியதற்கான கார்னோட் பரிசு வழங்கப்பட்டது.

winmeen.com

- ✓ **International Energy Agency (IEA)** யின் ஆவணப்படி பதவி காலத்தில் **18000** கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கியதற்காக இப்பரிசு அவருக்கு வழங்கப்படுகிறது.
- ✓ ஆனால், அமிர்தசர் ரயில் விபத்தில் **60** பேருக்கு மேல் இறந்து போனதால் அவர் பரிசு பெரும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதை தவிர்க்க வேண்டியதாகயிருந்தது.

**10. இந்தியாவின் சர்வதேச ஹைட்ரோகார்பன் மாநாடு 'PETROTECH-2019' பின்வரும் நகரங்களில் எங்கு நடைபெறுகிறது?**

**[A]** பூனே

**[B]** கொல்கத்தா

**[C]** கிரேட்டர் நொய்டா

**[D]** ஹைதெராபாத்

- ✓ 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 முதல் 12 ஆம் தேதி வரை, 14 வது சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயு கூட்டமைப்பு மற்றும் கண்காட்சி '**Petrotek** - 2019' நடைபெறுகிறது.
- ✓ இந்தியாவின் முதன்மை ஹைட்ரோகார்பன் சர்வதேச மாநாடு இந்தியாவின் பிரதம மந்திரியால் திறந்துவைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் பங்குதாரர் நாடுகளிலிருந்து **95** க்கும் மேற்பட்ட எரிசக்தி அமைச்சர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.
- ✓ இந்தியாவின் எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் சமீபகால சந்தை மற்றும் முதலீட்டாளர் நட்புரீதியான முன்னேற்றங்களை **3** நாள் மெகா நிகழ்ச்சி நிரூபிக்கும்.
- ✓ தொழில்நுட்ப வல்லுநர்கள், விஞ்ஞானிகள், திட்டமிடுபவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், மேலாண்மை வல்லுநர்கள், தொழில் முனைவோர், சேவை வழங்குநர்கள் மற்றும் விற்பனையாளர்கள் உள்ளிட்ட 70 நாடுகளில் இருந்து 86 க்கும் மேற்பட்ட பேச்சாளர்களும் 7000 பிரதிநிதிகளும் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

winmeen.com